**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் I, மேட்டூர்.**

**முன்னிலை:** N. கோபாலகிருஷ்ணன், B.Sc., B.L., குற்றவியல் நடுவர் எண் I,

**மேட்டூர்.**

**2026 ஆம் ஆண்டு, ஜீன் மாதம் 10 ஆம் நாள், புதன்கிழமை**

**குற்றவியல் பல்வகை மனு எண்: 513/2026**

அரசுக்காக, சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம்,

மேட்டுர் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் நிலைய உதவி ஆய்வாளர்,

**குற்ற எண்: 142/2025,**

**சட்டப்பிரிவுகள்: 8(b) உடன் இணைந்த 20(a)(i)**

**போதைப்பொருள் மற்றும் மனமயக்கப் பொருட்கள்**

**சட்டம் (NDPS Act)–1985** ...**புகார்தாரர் / மனுதாரர்**

**–எதிர்–**

**ராஜன்** (வயது 45), த/பெ குப்பண்ணன் ... **எதிர்மனுதாரர் / எதிரி**

**<u>அழிப்பு மற்றும் அப்புறப்படுத்துவதற்கான உத்தரவு</u>**

1. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களை அழித்தல் / அப்புறப்படுத்தல் தொடர்பாக, சம்பந்தப்பட்ட நிலைய பொறுப்பு அதிகாரி / மனுதாரர் சார்பில் கடந்த **02.06.2026 அன்று** தாக்கல் செய்யப்பட்ட **போதைப்பொருள் மற்றும் மன மயக்கப் பொருட்கள் சட்டம், 1985–ன் பிரிவு 52 A–ன்** படியான மனுவின் அடிப்படையில் இந்த நடவடிக்கைகள் இந்த நீதிமன்றத்தால் மேற்கொள்ளப்படுகின்றன.

2. மேலும், **இந்திய ஒன்றிய அரசு –எதிர்– மோகன்லால் மற்றும் மற்றொருவர், 2016 AIOL 3086 (28.01.2016) மற்றும் பாரத் ஆம்பாலே எதிர் சத்தீஸ்கர் மாநிலம், 2025 INSC 78 (06.01.2025)** ஆகிய வழக்குகளில், போதைப்பொருள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டம், 1985–ன் பிரிவு 52A மற்றும் அதன்கீழ் வகுக்கப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றி தயாரிக்கப்பட்ட சொத்துப் பட்டியல் (Inventory), புகைப்படங்கள் மற்றும்

மாதிரிகள், அசல் சான்றுப் பொருள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளதா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல், கட்டாயமாக முதன்மைச் சாட்சியங்களாக கருதப்பட வேண்டும் என நமது மாண்புமிகு உச்சநீதிமன்றம் வழிகாட்டுதல் வழங்கியுள்ளது.

3. மேலும் குறிப்பாக இந்த வழக்கினை பொறுத்து இந்த நீதிமன்றம் பின்வரும் அம்சங்களை கருத்தில் கொள்கிறது:–

a. புலன்விசாரணை அலுவலர் கடந்த **29.09.2025 அன்று சுமார் 2.300 கிலோ கிராம் கஞ்சாவைக்** கைப்பற்றியுள்ளார்.

b. கைப்பற்றப்பட்ட கஞ்சா இந்த நீதிமன்றத்தின் முன்பு முன்னிலைப்படுத்தப்பட்ட முறையாக **படிவம் 4–ல்** போதை பொருள் பட்டியல் சரிபார்க்கப்பட்டு சான்று செய்யப்பட்டு அதன் பின்னிட்டு **படிவம் 5–ல்** அளிக்கப்பட்ட விண்ணப்பத்தின் பேரில் மாதிரி எடுக்கப்பட்டுள்ளது.

c. மேலும் மேற்படி **படிவம் 5–ன் கீழ்** தாக்கல் செய்யப்பட்ட மனுவின் பேரில் மேற்படி மாதிரிகள் எடுக்கப்படும் போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் ஏற்கனவே இந்த நீதிமன்றத்தால் சான்று செய்யப்பட்டுள்ளது.

**d. கைப்பற்றப்பட்ட போதைப்பொருளில் மாதிரி எடுக்கப்பட்டது போக மீதமுள்ள கஞ்சா படிவம் 1 மூலம் போதைப்பொருள் கிடங்கில் வைக்கப்பட்டுள்ளது.**

e. அதன்பின்னிட்டு **படிவம் 6–ன்** மூலம் வேதியியல் பகுப்பாய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

f. கைப்பற்றப்பட்ட பொருளின் தன்மையை உறுதிப்படுத்தும்

வகையில், மேற்படி வேதியியல் பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டு, **SLM/NAR/399/2025** என்ற எண்ணில், கடந்த **10.10.2025** தேதியில் வேதியியல் பகுப்பாய்வு அறிக்கை பெறப்பட்டு கைப்பற்றப்பட்ட பொருள் கஞ்சா தான என உறுதி செய்யப்பட்டுள்ளது.

g. இந்த நடவடிக்கைகள், மேற்படி வழக்கு சம்பவம் **போதைப்பொருள் மற்றும் மன மயக்கப் பொருட்கள் (கைப்பற்றுதல், சேமித்தல், மாதிரி எடுத்தல் மற்றும் அழித்தல்) விதிகள், 2022** ஏற்படுத்தப்பட்ட பிறகு அதாவது கடந்த **29.09.2025–ஆம் தேதி** இந்த வழக்கு சம்பவம் நடைபெற்றுள்ளது.

h. மேற்படி 2022 ஆம் வருடம் ஏற்படுத்தப்பட்ட விதிகள் இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட பொருட்களுக்கு பொருந்தும்.

i. இத்தகைய சூழ்நிலையில், போதைபொருள் கிடங்கில் வைக்கப்பட்டுள்ள மீதமுள்ள கஞ்சாவையும் அப்படியே வைத்திருப்பதால் எந்தவொரு பயனும் விளையப்போவதில்லை என இந்த நீதிமன்றம் கருதுகிறது.

j. மேலும், கடந்த 2015–ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட மத்திய அரசின் அரசிதழ் அறிவிக்கையின் விதி எண் 2–இன் படி, கைப்பற்றப்பட்ட அனைத்து போதைப்பொருட்களும் மற்றும் மனமயக்கப் பொருட்களும் கட்டாயமாக அழிக்கப்பட வேண்டும் என்பதையும் இந்த நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

எனவே, மேற்கண்ட சூழ்நிலைகளையும், **போதைப்பொருள் மற்றும் மன மயக்கப் பொருட்கள் சட்டம், 1985 மற்றும் இதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளின்படி** இந்த நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் கருத்தில் கொண்டு, பொது நலனையும், சாட்சிய பொருளின் ஆதாரத் தன்மையையும் பாதுகாக்கும் பொருட்டு, மேற்படி போதைப் பொருளை அழிப்பதற்கு உத்தரவிடுவது தக்கது என

இந் நீதிமன்றம் கருதுகிறது.

அதன்படி, கைப்பற்றப்பட்ட சுமார் **2.300 கிலோ கிராம் கஞ்சா எனும் போதைப்பொருளில் மாதிரிகளைத்தவிர மீதம் உள்ள P1 என குறியீடு செய்யப்பட்ட** போதைப்பொருளை பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு **அழிக்க** இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது:–

1. **எனேவ இச்சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள போதைப்பொருள் அழிப்புக் குழுவின் முன் மேற்படி போதைப்பொருளை உரிய அழிப்பு நடவடிக்கைக்காக ஆஜர்படுத்த புலன்விசாரணை அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**

2. எனவே, இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

மேலும் போதைப்பொருள் **அழித்தலுக்குப் பிந்தைய அறிக்கை (Post–destruction Report) மற்றும் அழித்தலின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் அல்லது வீடியோ ஆதாரங்கள்** ஏதேனும் இருப்பின் அதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் முறையாகச் சான்றளிக்கப்பட்டு, இந்நீதிமன்ற ஆவணங்களுக்காக தாக்கல் செய்யப்பட வேண்டும்.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்குக் கூறப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் திருத்தப்பட்டு, இன்று **10.06.2026–ஆம்** தேதியன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

NAGARAJAN GOPALAKRISHNAN

Digitally signed by NAGARAJAN GOPALAKRISHNAN
Date: 2026.06.10 18:11:35 +0530

**குற்றவியல் நடுவர் எண் I, மேட்டூர்.**